ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஆகஸ்ட். 02, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 299 ❖ ரூ.10

## கோடநாடு வழக்கு விசாரணையில் தொய்வு - ஓபிஎஸ், தினகரன் கூட்டாக

# வலியுறுத்தல்

## மூன்று மாதங்களில் நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறி ஆட்சிக்கு வந்த திமுக 30 மாதங்கள் ஆகியும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு

**தேனி, ஆக. 2–**

கோடநாடு வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்பட்டுள்ளது கண்டித்து தேனியில் ஓபிஎஸ் டிடிவி தினகரன் கூட்டாக பங்கேற்ற ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

"ஆட்சிக்கு வந்தால் 3 மாதங்களில் கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தரப்படும் என்று தேர்தல் சமயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார். அவர் ஆட்சிக்கு வந்து 30 மாதங்களாகிவிட்டன. கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு ஆமை வேகத்தில் நடக்கிறது" என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.



கோடநாடு கொலை வழக்கு விசாரணையை விரைந்து நடத்தக் கோரி முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தலைமையில், நேற்று தேனியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஓ.பன்னீர்செல்வம் பேசியது: "மறைந்த முதல்வர் ஜெயலலிதா வாழ்ந்த கோடநாடு இல்லத்தில் நடந்து முடிந்திருக்கிற கொலை, கொள்ளை வழக்கை துரிதமாக விசாரணை செய்ய வேண்டும். இதுகுறித்து தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதியை ஆளும் திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின், உரிய தண்டனையை கோடநாடு கொள்ளைக் கூட்டத்துக்கும், கொலையாளிகளுக்கும் பெற்றுத்தர வேண்டும்.

தேனியில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, ஆதரவு தெரிவித்துள்ள அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரனுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

24.4.2017 அன்று கோடநாடு பங்களாவில், காவலாளி ஓம்பகதூரை கொலை செய்து, அதன் தொடர்ச்சியாக, கிருஷ்ண பகதூர் என்ற காவலாளியை படுகாயப்படுத்திவிட்டு, அதன் தொடர்ச்சியாக மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் கார் ஓட்டுநராக இருந்த கனகராஜையும் கொலை செய்துவிட்டு, பின்னர், இந்த வழக்கில் குற்றவாளியாக கூறப்பட்ட சயான் அவரது மனைவி மற்றும் குழந்தை ஆகியோரை லாரி ஏற்றி கொலை செய்துவிட்டு, விபத்து ஏற்படுத்தி சயான் மனைவியும் குழந்தையும் படுகொலை செய்யப்பட்டனர்.

கோடநாடு பங்களாவில், கணினி ஆப்ரேட்டராக இருந்தவரையும் கொலை செய்யப்பட்டார். இத்தனையும் நடந்தபிறகு, அந்த குற்றவாளிகளை கண்டுபிடித்து உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்ற நல்ல நோக்கத்துக்காக இந்த ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டம் நம்முடைய எண்ணத்தை பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

சட்டமன்ற தேர்தலின் போது முதல்வர் ஸ்டாலின், தான் முதல்வராக வந்தால், 3 மாதங்களுக்குள் – 90 நாட்களுக்குள் கோடநாடு பங்களாவில் நடத்தப்பட்ட கொள்ளை, மற்றும் கொலையையும் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை வழங்குவேன் என்று உறுதியளித்துதான் அவர் ஆட்சிக்கு வந்தார். ஆனால், இன்றைக்கு 30 மாதங்களாகி விட்டன. இந்த வழக்கு இன்னும் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது" என்று அவர் பேசினார்.

முன்னதாக, கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் விரைவாக விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

தேனியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை போல் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் தமிழக அரசே வலியுறுத்தி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.





▶ புதுக்கோட்டையில் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் ஆணைக்கிணங்க முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவில் நடைபெற்ற கொலை, கொள்ளை மற்றும் மர்ம நிகழ்வுகள் குறித்து துரிதமாக உரிய விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர திமுக அரசை வலியுத்தி புதுக்கோட்டை மாவட்ட அதிமுக வடக்கு, தெற்கு, கிழக்கு மாவட்ட அமமுக வடக்கு, தெற்கு, இணைந்து புதுக்கோட்டை சின்னப்பா பூங்கா அருகில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் இராஜ-ராஜசேகர், தெற்கு மாவட்ட செயலாளர் அறந்தாங்கி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இரத்தினசபாபதி, கிழக்கு மாவட்ட செயலாளர் ஞான, கலைச் செல்வன் அமமுக வடக்கு மாவட்ட செயலாளர் ஓ.வீரமணி, தெற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் பிராபகரன் ஆகியோர் தலைமையிலும், மாவட்ட, ஒன்றிய, பொறுப்பாளர்கள், மகளிரணி பொறுப்பாளர்கள், ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

## மணிப்பூர் மக்களுக்கு ரூ.10 கோடிக்கு அத்தியாவசிய பொருட்கள் அனுப்ப தயார் பிரேன் சிங்குக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

**சென்னை , ஆக. 2–**

மணிப்பூரில் வன்முறையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிடும் பொருட்டு ரூ.10 கோடி மதிப்புள்ள அத்தியாவசிய பொருட்களை அனுப்பி வைத்திட ஒப்புதல் வழங்கக் கோரி மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.



அக்கடிதத்தில், "மணிப்பூரில் உள்ள தமிழர்களுக்கு அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி. தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தற்போதைய சூழ்நிலையின் காரணமாக 50,000–க்கும் மேற்பட்ட மக்கள் நிவாரண முகாம்களில் தங்கியுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில அத்தியாவசிய பொருட்களின் தேவை அதிகரித்து வருவதாகவும் எனது கவனத்துக்கு வந்துள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில், சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பிலான தார்பாலின் விரிப்புகள், படுக்கை விரிப்புகள், கொசுவலைகள், அத்தியாவசிய மருந்துகள், சானிட்டரி நாப்கின்கள் மற்றும் பால் பவுடர் போன்ற தேவையான நிவாரணப் பொருட்களை வழங்குவதன் மூலம் மணிப்பூர் மாநிலத்துக்கு உதவிகளை வழங்கிடத் தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது. இந்த பொருட்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தேவைப்பட்டால் அவற்றை விமானம் மூலம் அனுப்பி வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த மனிதாபிமான உதவிக்கு மணிப்பூர் மாநில அரசின் ஒப்புதலை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து தெரியப்படுத்த வேண்டும். இதன்மூலம் தமிழக அரசின் அதிகாரிகள் மணிப்பூர் மாநில அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொண்டு நிவாரணப்பொருட்களை விரைவாக அனுப்ப இயலும்" என்று மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங்கிடம் தமிழக முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், ராங்கியத்தில், புதிய வழித்தட பேருந்து சேவையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் துணை மேலாளர் சுப்பு (வணிகம்), ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், ஊராட்சிமன்றத் தலைவர் சாந்தி பொன்னையா, வட்டாட்சியர் புவியரசன், கிளை மேலாளர் பழனிவேல் (நகர்), உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், குளமங்கலம் ஊராட்சியில், கழுமங்கலம் பெரியக்குளம் ரூ.52.78 லட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று துவக்கி வைத்தார். உடன் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.








▶ உலகப் புகழ்பெற்ற கள்ளழகர் கோயிலில் ஆடிப் பெருந்திருவிழாவின் முக்கிய விழாவன தேரோட்டம் நேற்று நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று வடம் பிடித்து இழுக்க தேரோட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் பங்கேற்ற பக்தர்கள் "கோவிந்தா... கோவிந்தா..." என முழங்கினர். பக்தர்கள் வெள்ளத்தில் ஆடி, ஆடி அசைந்தாடி வந்த தேரில் கள்ளழகர் என்ற சுந்தரராஜபெருமாள் எழுந்தருளி அருள்பாலித்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# நிலவின் சுற்றுப்பாதைக்குள் பயணிக்க துவங்கியது சந்திரயான்–3 அடுத்த ஸ்டாப் நிலா தான் இஸ்ரோ

ஸ்ரீஹரிகோட்டா , ஜூலை. 2–

புவி வட்டத்தின் இறுதி சுற்றுப் பாதையை வெற்றிகரமாக நிறைவு செய்தது சந்திரயான்-3 விண்கலம், நிலவின் சுற்றுப்பாதைக்குள் பயணிக்க துவங்கியது என இஸ்ரோ தெரிவித்துள்ளது. நள்ளிரவு (ஆக 1- ம் தேதி) 12.05 முதல் நிலவின் வட்டப் பாதைக்குள் பயணிக்க துவங்கியது என தெரிவித்துள்ளது.

நள்ளிரவு 12.05ல் இருந்து 1 மணி வரை நிலவை நோக்கிய பயணத்துக்கான பணிகள் நடந்துமுடிந்ததாகவும், சந்திரயான் விண்கலத்தில் உள்ள த்ரஸ்டர்களில் உந்து விசை ஏற்படுத்தப்பட்டதை அடுத்து அது நிலவை நோக்கிய பயணத்தை மேற்கொண்டு வருகிறது என்றும் இஸ்ரோ தகவல்.

இஸ்ரோ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "சந்திரயான்-3 விண்கல



பயணத்தின் மிக முக்கியமான படி, புவி வட்டப் பாதையிலிருந்து, நிலவின் சுற்றுப்பாதைக்குள் செல்வது. அதன்படி, நிலவின் சுற்றுப்பாதைக்குள் சந்திரயான் நுழைய 28 முதல் 31 நிமிடங்கள் எடுத்துக் கொண்டுள்ளது. சரியான பாதையில் எதிர்பார்க்கப்பட்டதைவிட மேலும் கூடுதலான வேகத்தில் நிலாவை நோக்கி சந்திரயான் சென்று கொண்டிருக்கிறது. அடுத்த ஸ்டாப் நிலா தான்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரயான்-3விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பெங்களூருவில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தின் சுற்றுப் பாதையை நீட்டிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 26 ஆம் தேதி சந்திரயான்–3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தூரம் 5–வது முறை வெற்றிகரமாக மாற்றியமைக்கப்பட்டது. இதன் அடுத்தகட்டமாக சந்திரயான் விண்கலம் நேற்று புவிவட்டப்பாதையில் இருந்து விலக்கப்பட்டு நிலவின் சுற்றுப்பாதைக்குள் தள்ளப்பட்டது. அதன்பிறகு திட்டமிட்டபடி ஆகஸ்ட் 23–ம் தேதி விண்கலம் நிலவில் மெதுவாக (சாஃப்ட் லேண்டிங்) தரையிறக்கப்படவுள்ளது.

# தானே நெடுஞ்சாலை பணியின் போது கிரேன் சரிந்து விழுந்ததில் 15 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்

தானே, ஜூலை. 2–

மகாராஷ்டிர மாநிலம் தானேயின் ஷாஹாபூரில் திங்கள் கிழமை இரவு கிரேன் சரிந்து விழுந்ததில் 15 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சம்ருத்தி எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த நேரத்தில் கிரேன் சரிந்து விழுந்தது விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 15 பேர் உடல் நசுங்கி பலியானது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் மூன்று பேர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். இதுதவிர மேலும் 5 பேர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என ஷாஹாபூர் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்ருத்தி எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்ட கட்டுமானப் பணியின் ஒரு பாகமாக தானேயின் ஷாஹாபூரின் சர்லம்பே கிராமத்திற்கு அருகில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்த



போது. நெடுஞ்சாலைகள், ரயில் பாலங்கள் மற்றும் பெரிய கட்டிடங்களுக்கு அடித்தளம் அமைக்க பயன்படும் மொபைல் கேன்ட்ரி கிரேன் எனப்படும் கிரேனை வைத்து தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். அந்த சமயத்தில் எதிர்பாராமல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உடனடியாக தேசிய பேரிடர் மீட்புப்படை வரவழைக்கப்பட்டு மீட்புப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. அவர்களுடன் ஷாஹாபூர் தீயணைப்பு படையினர் மற்றும் உள்ளூர் மக்களும் மீட்பு பணியில் ஈடுபட்டனர். மும்பை மற்றும் நாக்பூர் என இரண்டு நகரங்களையும் இணைக்கும் வகையில் சம்ருத்தி விரைவுச்சாலை போடப்பட்டு வருகிறது. 701 கி.மீ நீளமுள்ள இச்சாலை நாக்பூர், வாஷிம், வார்தா, அகமதுநகர், புல்தானா, அவுரங்காபாத், அமராவதி, ஜல்னா, நாசிக் மற்றும் தானே உள்ளிட்ட 10 மாவட்டங்களை கடந்து செல்கிறது. இந்த விரைவுச்சாலையின் முதல் கட்டம் நாக்பூரை கோயில் நகரமான ஷீரடியுடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு பணிகள் முடிந்து, பிரதமர் மோடியால் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் திறக்கப்பட்டது. தற்போது இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட பணிகள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.




# ஜெயிலர் படம் அதிகாலை காட்சிக்கு அனுமதி ரத்து?

சென்னை , ஜூலை. 2–

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள படம், 'ஜெயிலர்'. சிவராஜ் குமார், தமன்னா, ரம்யா கிருஷ்ணன், ஜாக்கி ஷெராஃப் உட்படப் பலர் நடித்துள்ள இந்தப் படத்துக்கு அனிருத் இசை அமைத்துள்ளார். இந்தப் படம் வரும் 10–ம் தேதி வெளியாகிறது. சன்பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்துக்கு அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது.

இந்தப் படத்துக்கு அதிகாலை சிறப்புக் காட்சிகள் இருக்கும் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் முதல் காட்சி 9 மணிக்குத்தான் தொடங்கும் என்றும் கூறப்படுகிறது இதுபற்றி திரையரங்க உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் ஸ்ரீதரிடம் கேட்டபோது, "இதுவரை அரசிடமிருந்து எந்த வழிகாட்டுதலும் எங்களுக்கு வரவில்லை. அரசு என்ன சொல்கிறதோ அதை நாங்கள் பின்பற்றுவோம்" என்றார். இதற்கு முன் வெளியான, பொன்னியின் செல்வன் 2, மாவீரன், மாமன்னன் உட்பட சில பெரிய பட்ஜெட் படங்களுக்கும் அதிகாலை காட்சிக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை அருகே போலீஸ் என்கவுன்ட்டரில் 2 ரவுடிகள் சுட்டுக் கொலை

கூடுவாஞ்சேரி , ஜூலை. 2–

சென்னை அருகே நேற்று செவ்வாய் கிழமை அதிகாலை நடந்த போலீஸ் என்கவுன்ட்டரில் 2 ரவுடிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். காவல் உதவி ஆய்வாளர் ஒருவர் காயமடைந்தார். நிகழ்விடத்தில் தடயவியல் நிபுணர்கள் சோதனை நடத்தினர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக திமுக பிரமுகரை வெட்டிக் கொலை செய்ய முயற்சி செய்ததுடன், தப்பி ஓடிய இரண்டு ரவுடிகள் குறித்து மணிமங்கலம் போலீஸார் வழக்குப்பதிவு செய்து இருவரையும் தீவிரமாகத் தேடிவந்த நிலையில் இன்று அவர்கள் என்கவுன்ட்டரில் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

என்கவுன்ட்டர் - நடந்தது என்ன?: மண்ணிவாக்கம் ரமேஷ், ஓட்டேரி சோட்டா வினோத் ஆகிய இருவர் தான் நேற்று போலீஸ் என்கவுன்ட்டரில் கொல்லப்பட்ட ரவுடிகள். இவர்கள் மீது கொலை, கொலை முயற்சி, வழிப்பறி தொடர்பாக ஓட்டேரி, வண்டலூர், கூடுவாஞ்சேரி



காவல் நிலையங்களில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்நிலையில் இவர்கள் தங்களின் சகாக்களுடன் நேற்று அதிகாலை ஒரு காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது, கூடுவாஞ்சேரி ஆய்வாளர் முருகேசன் தலைமையில் போலீஸார் கீரப்பாக்கம்- காரணை புதுச்சேரி பிரதான சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

போலீஸார் அந்தக் காரை நிறுத்த முயன்றுள்ளனர். ஆனால் அந்தக் கார் நிற்காமல் சென்று போலீஸ் வாகனத்தின் மீது மோதி நின்றது. பின்னர் காரில் இருந்து இறங்கியவர்கள் தப்பியோட முயன்றுள்ளனர். அவர்களை தடுக்க முயன்ற உதவி ஆய்வாளர் சிவகுருநாதனை ரவுடிகள் வெட்டியுள்ளனர். இதில் அவர் காயமடைந்தார். பின்னர் தப்பியோடிய ரவுடிகளை துரத்திச் சென்ற போலீஸார் சுட்டதில் இரண்டு ரவுடிகளும் உயிரிழந்தனர். காயமடைந்த உதவி ஆய்வாளர் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சம்பவம் நடந்த இடத்தில் தடயவியல் நிபுணர்கள் சோதனையில் ஈடுபட்டு தடயங்களை சேகரித்தனர். வாகனச் சோதனையின்போது உதவி ஆய்வாளரை அரிவாளால் வெட்டியதாலேயே என்கவுன்ட்டர் நடத்தியதாக காவல்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

# வர்த்தக பயன்பாடு சிலிண்டர் விலை குறைப்பு சென்னையில் விலை ரூ.1,852.50

மும்பை , ஜூலை. 2–

வர்த்தகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் குறைந்துள்ளன. இதன்படி, 19 கிலோ எடையுள்ள வர்த்தகப் பயன்பாட்டு சிலிண்டரின் விலை சென்னையில் நேற்று (ஆகஸ்ட் 1) முதல் ரூ.1,852.50–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை ஒவ்வொரு மாநிலத்திலும் வரிகளுக்கு ஏற்ப மாறுபடுகிறது.



சர்வதேச சந்தை நிலவரம், அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் அவ்வப்போது நிர்ணயித்து வருகின்றன. அதன்படி வர்த்தகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நேற்று ஆகஸ்ட் மாதத்தின் முதல் நாளில் குறைந்துள்ளன.

வீட்டில் சமையல் செய்ய பயன்படுத்தும் சிலிண்டரின் விலையில் மாற்றம் இல்லை. மார்ச் 1 ஆம் தேதிக்குப் பின்னர் 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை எந்த மாற்றமும் இன்றி தொடர்கிறது.

# லல்லு குடும்பத்தினருக்கு சொந்தமான ரூ.6 கோடி மதிப்பிலான சொத்துகள் முடக்கம்

பாட்னா , ஜூலை. 2–

கடந்த 2004 முதல் 2009–ம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் ரெயில்வே மந்திரியாக லல்லு பிரசாத் பதவி வகித்தார். அப்போது ரெயில்வேயின் குரூப்-டி, தேர்வுகளில் சிலர் விதிமுறைகளுக்கு புறம்பாக நியமிக்கப்பட்டனர்.



அதற்கு லஞ்சமாக வேலை பெற்றவர்கள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான சுமார் 1.05 லட்சம் சதுரஅடி நிலம் லல்லு குடும்பத்தினரின் பெயருக்கு மாற்றப்பட்டுப் பதிவு செய்யப்பட்டது. அந்த நிலத்தை சந்தை மதிப்பை விட குறைந்த விலைக்கு லல்லு குடும்பத்தினர் நேரடியாக வாங்கியுள்ளனர் என்று சி.பி.ஐ.யின் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

லல்லு மற்றும் அவரின் குடும்பத்தினருக்கு எதிரான விசாரணையில் பீகார் மாநிலம் பாட்னா மற்றும் உத்தர பிரதேச மாநிலம் காஜியாபாத்தில் உள்ள 6 அசையா சொத்துகள், டெல்லியில் உள்ள 4 மாடி பங்களா, பாட்னாவில் உள்ள 2 நிலங்கள், காஜியாபாத்தில் உள்ள 2 தொழில் மனைகளின் ஒரு பகுதி என லல்லு பிரசாத்தின் குடும்பத்தினர் அவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ள இந்தச் சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.6.02 கோடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லி அவசர சட்ட மசோதா மக்களவையில் தாக்கல் காங்கிரஸ் எதிர்ப்பு

புதுடெல்லி , ஜூலை. 2–

டெல்லி அரசின் அதிகாரத்தை குறைக்கும் வகையில் மத்திய அரசு சமீபத்தில் அவசர சட்டம் கொண்டுவந்தது. இந்த அவசர சட்டத்துக்கு எதிராக டெல்லி முதல் மந்திரியும், ஆம் ஆத்மி ஒருங்கிணைப் பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் பல்வேறு மாநில முதல் மந்திரிகளையும், அரசியல் கட்சி தலைவர்களையும் சந்தித்து ஆதரவு திரட்டினார்.

இந்த அவசர சட்டத்துக்கு மாற்றாக பாராளுமன்றத்தில் சட்ட மசோதா கொண்டு



வரப்பட்டால் அதை முறியடிக்க ஒத்துழைப்பை அளிப்பதாக பல்வேறு கட்சி தலைவர்கள் தெரிவித்தனர். கடந்த மாதம் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் அவசர சட்டத்திற்கு மாற்றாக கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்த மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில், மக்களவையில் நேற்று மசோதா தாக்கல் செய்யப்பட்டது. உள்துறை இணை மந்திரி நித்யானந்த ராய் மசோதாவை அறிமுகம் செய்து பேசினார். இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உறுப்பினர் ஆதிர் ரஞ்சன் எதிர்ப்பு தெரிவித்தார். இது கூட்டாட்சி ஒத்துழைப்பு என்ற கருத்தை மீறுவதாக இருப்பதாகவும், உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது என்றும் கூறிய அவர், இந்த மசோதா டெல்லி துணைநிலை ஆளுநரின் அதிகாரத்தை மேலும் அதிகரிக்கும் என்றார்.

# மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்ல மாணவர்களுக்கு சீருடை வழங்கும் விழா



புதுக்கோட்டை , ஜூலை. 2–

புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் சார்பாக மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் சீருடை வழங்கும் விழா வள்ளலார் மாணவர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சங்கத்தின் தலைவர் பொறியாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். முன்னாள் தலைவர்கள் ஜெய் பார்த்தீபன், அன்னை பார்த்திபன், அகிலா சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் பொறியாளர் பெர்லின் தாமஸ் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்விற்கு ஆதிகாலத்து அலங்கார மாளிகை நிறுவனங்களின் இணை இயக்குனர் இளையராஜா, ரோட்டரி துணை ஆளுநர் கதிரேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு ரூபாய் 35,000 மதிப்புள்ள சீருடைகளை மாணவர்களுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார்கள். சமரச சன்மார்க்க சங்கத்தின் மாவட்ட தலைவர் காத்தமுத்து சுவாமிகள், இல்ல நிர்வாகி ரகுபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதன்பிறகு, உலக நண்பர்கள் தினத்தினை முன்னிட்டு இல்ல மாணவர்களுடன் கேக் வெட்டி, பரிசுகள் வழங்கி கொண்டாடினர். பின்னர் மாணவர்கள் மற்றும் ரோட்டரி அங்கத்தினர்கள் ஆகியோர் இணைந்து சிறப்பான சிற்றுண்டி அருந்தினார்கள். மேலும், கதைகள், திருக்குறள் உள்ளிட்ட அரட்டை விளையாட்டுகள் நடைபெற்றது. இது அங்கு இருந்த மாணவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான ஒரு தருணமாக அமைந்தது. நிகழ்விற்கான ஏற்பாடுகளை திட்டத் தலைவர் ஆறுமுகம், திட்ட இயக்குநர் ஓவியர் ரவி உள்ளிட்ட சங்கத்தினர் செய்திருந்தனர். நிறைவில் சங்கத்தின் செயலாளர் எஸ்கேஎம் சரவணன் நன்றி கூறினார்.



**செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர் பகுதியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு பள்ளி மாணவிகளுக்கு இலவச மிதிவண்டியினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஒன்றிய குழு பெருந்தலைவர் கீதா கார்த்திகேயன், மதுராந்தகம் நகர கழக செயலாளர் ரவி ,மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் முதுகரை கார்த்திகேயன் ,முன்னாள் நகர்மன்ற கவுன்சிலர் பூக்கடை சரவணன் மற்றும் அதிமுக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.**

# தியாகராய நகரில் தரமற்ற அசைவ உணவு: ஓட்டலுக்கு 'சீல்' ஐ.டி. ஊழியர்கள் புகாரால் அதிகாரிகள் அதிரடி

சென்னை , ஜூலை. 2–

தியாகராய நகரில் தரமற்ற அசைவ உணவு வழங்கிய ஓட்டலுக்கு 'சீல்' ஐ.டி. ஊழியர்கள் புகாரால் அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை.

தியாகராய நகரில் ஒரு அசைவ உணவகம் உள்ளது. பிரியாணி உள்ளிட்ட அசைவ உணவை சாப்பிட இந்த ஓட்டலுக்கு வாடிக்கையாளர்கள் அதிக அளவில் வருவார்கள். நேற்று பகலில் ஐ.டி. ஊழியர்கள் 15 பேர் மதிய உணவு சாப்பிட சென்றனர். சிக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி உணவுகளை ஆர்டர் செய்து சாப்பிட்டனர். சிறிது சாப்பிட்டதுமே உணவு சரியில்லை என்று தெரிய வந்தது. உடனே ஓட்டல் ஊழியர்களிடம் புகார் தெரிவித்தனர். ஆனால் ஊழியர்கள் தரப்பில் உணவு தரமானதாகத்தான் உள்ளது. முழுவதுமாக சாப்பிட்டு விட்டு சொல்லுங்கள் என்று




தெரிவிக்கப்பட்டது. ஆனால் பெண் ஊழியர்கள் சிலர் உணவு கெட்டு போனது போல் தெரிகிறது. வாந்தி வருவது போல் உள்ளது என்று சத்தம் போட்டதால் ஓட்டல் ஊழியர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டது. இது பற்றி உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து உள்ளார்கள்.

உடனடியாக அதிகாரிகள் அந்த ஓட்டலுக்கு விரைந்து சென்று ஆய்வு நடத்தினார்கள். வாடிக்கையாளர்கள் சாப்பிட்ட உணவு மாதிரிகளை எடுத்து சோதனைக்கு அனுப்பினார்கள். இதையடுத்து ஓட்டல் உரிமையாளரை வர வழைத்து அவர் முன்னிலையில் சமையல் கூடத்தில் சமைத்து வைத்திருந்த உணவுகளை ஆய்வுசெய்தார்கள். அப்போது குழம்புக்குள் பாலித்தீன் கவர் கிடந்ததை பார்த்தனர். குளிர்பதன பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த இறைச்சியும் கெட்டுப்போய் இருந்தது. மேலும் அதற்குள் கரப்பான் பூச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன. அவற்றை பார்வையிட்ட அதிகாரிகள் இந்த உணவை நீங்கள் சாப்பிடுவீர்களா என்று கடை ஊழியர்களிடம் கோபத்தில் கேட்டனர். அதை தொடர்ந்து கெட்டுப்போன உணவுகளை எடுத்து சென்று அழித்தனர். மேலும் தற்காலிகமாக அந்த ஓட்டலை பூட்டி சீல் வைத்தனர். தரமற்ற உணவுகள் பற்றி விளக்கம் அளிக்கும் படி ஓட்டல் உரிமையாளருக்கு நோட்டீசும் கொடுக்கப்பட்டது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

02.08.2023 ❖ வரலாறு

### சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில்

# ஆடி மாதம் பௌர்ணமி மற்றும் செவ்வாய்க்கிழமையை முன்னிட்டு பக்தர்கள் கூட்டம் அலைமோதியது





ஊத்துக்கோட்டை, ஆக.2-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு ஆறு வாரங்கள் தொடர்ச்சியாக வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வேண்டுதல் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

முருகனுக்கு உகந்த செவ்வாய்க்கிழமை நாட்களில் சிறுவாபுரி கோவிலுக்கு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விடியற்காலை முதலே நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்துவிட்டு செல்வது வழக்கம். இன்று ஆடி மாத பௌர்ணமி மற்றும் செவ்வாய்க்கிழமை என்பதால் சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

மூலவருக்கு பால், தயிர், சந்தனம், உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்கள் மூலம் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. மூலவர் முத்தங்கி அலங்காரத்துடன் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நேற்று காலை முதலே ஏராளமான பக்தர்கள் பொது தரிசனம், ரூ.50, ரூ.100 கட்டண தரிசனம் என அனைத்திலும் நீண்ட வரிசையில் காத்திருந்தது தரிசனம் செய்தனர்.

எனவே, பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. கோவிலுக்கு வெளியேயும், காத்திருப்பு மண்டபம் உள்ளிட்ட இடங்களில் கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாமல் சுமார் 1மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு குடிநீர் உள்ளிட்ட வசதிகளை கோயில் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமையில் திருக்கோவில் பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

# இதுவே நான் விளையாடிய கடைசி டெஸ்ட் போட்டி இங்கிலாந்து வீரர் மொயின் அலி அறிவிப்பு



லண்டன், ஆக.2-

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான நடப்பு ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டிதான் தனது கடைசி டெஸ்ட் போட்டி என இங்கிலாந்து அணியின் ஆல்ரவுண்டர் மொயின் அலி அறிவித்துள்ளார்.

“நல்லதொரு கம்பேக் தொடராக இது அமைந்தது. மறக்கமுடியாத தொடராகவும் அமைந்தது. ஓய்வை அறிவித்த பிறகு மீண்டும் வந்து டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவேன், விக்கெட் வீழ்த்துவேன் என எண்ணவில்லை. ஓய்வில் இருந்து வெளிவர சொல்லி கேப்டன் ஸ்டோக்ஸ் மெசேஜ் செய்த காரணத்தால் விளையாட வந்தேன். ஆனால், இதுவே எனது கடைசி டெஸ்ட் போட்டி. மீண்டும் ஸ்டோக்ஸ் மெசேஜ் செய்தால் அதனை டெலிட் செய்துவிடுவேன்” என மொயின் அலி தெரிவித்துள்ளார்.

கடந்த 2021-ல் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக மொயின் அலி அறிவித்தார். இருந்தும் கடந்த ஜூன் மாதம் ஆஷஸ் தொடருக்காக டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட கம்பேக் கொடுத்தார். 36 வயதான மொயின் அலி, 68 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளார். 3,094 ரங்கள் குவித்துள்ளார். 201 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளை கைப்பற்றி அணியின் வெற்றிக்கு மொயின் அலி உதவினார். தற்போது இரண்டாவது முறையாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

# உத்திரமேரூர் அரசு ஆஸ்பத்திரியில் ஆக்சிஜன் முக கவசத்துக்கு பதிலாக 'டீ கப்'

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் விசாரணைக்கு உத்தரவு



உத்திரமேரூர், ஆக,2

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் பகுதியில் உள்ள பள்ளி மாணவர் ஒருவர் வகுப்பறையில் இருந்த போது மூச்சு விட சிரமப்பட்டுள்ளார். உடனடியாக அந்த மாணவரின் பெற்றோருக்கு ஆசிரியர்கள் தகவல் தெரிவித்துள்ளார்கள். பெற்றோர் விரைந்து சென்று அந்த மாணவரை உத்திரமேரூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றுள்ளார்கள். அவரை பரிசோதித்த டாக்டர்கள் முதலில் அவருக்கு சீராக சுவாசிக்க ஏதுவாக ஆக்சிஜன் நாசி மாஸ்க் பொருத்தும்படி பரிந்துரைத்துள்ளார்கள்.

உடனே வார்டில் அந்த மாணவரை அனுமதித்து மாஸ்க் பொருத்த முடிவு செய்துள்ளார்கள். இந்த மாஸ்கை பொருத்துவவதன் மூலம் சிலிண்டரில் இருந்து வரும் ஆக்சிஜனை சுவாசித்து இன்னொரு துவாரத்தின் வழியாக கார்பன்டை ஆக்சைடை வெளியேற்ற முடியும்.

இந்த மாஸ்கை பொருத்தும் போது அதில் உள்ள எலாஸ்டிக் கயிறை தலையின் பின்பக்கம் மாட்டி விடுவார்கள். இதனால் மூக்கு மட்டும் வாய் பகுதியை விட்டு நகராமல் அப்படியே இருக்கும். ஆனால் இந்த மாணவருக்கு மாஸ்க் இல்லாததால் டீ கப்பில் துவாரம் போட்டு அதை ஆக்சிஜன் சிலிண்டரில் இருந்து வரும் டியூபுடன் இணைத்து அதை மாணவர் கையில் கொடுத்து மூக்கில் வைத்து பிடித்து கொள்ளும்படி கூறியிருக்கிறார்கள். அந்த மாணவரும் அப்படியே பிடித்து சிரமப்பட்டு சமாளித்துள்ளார். இதை பார்த்த நோயாளி ஒருவர் செல்போனில் வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளார்.

வீடியோ எடுத்தவர் கூறும்போது, இதே போல் டீ கப்பை பயன்படுத்துவது இது முதல் முறையல்ல. ஏற்கனவே கடந்த வாரமும் ஒருவருக்கு பொருத்தி இருந்ததை பார்த்தாக கூறி உள்ளார். மாஸ்க்குக்கு பதில் டீ கப்பை பயன்படுத்தியது ஏன்? மாஸ்க் இல்லையா? என்பதற்கு மருத்துவர்கள் எந்த பதிலும் கூறவில்லை.

ஒருபக்கம் இது அதிர்ச்சியாக இருந்தாலும் அவசரத்துக்கு சமயோசிதமாக செயல்பட்ட மருத்துவ ஊழியர்களை பாராட்டுவதை தவிர வழியில்லை. இந்த விவகாரம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அவர் உடனடியாக மருத்துவ பணிகள் இயக்குனரிடம் விசாரிக்கும்படி உத்தரவிட்டு உள்ளார்.



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக ஆய்வு கூட்டம் மற்றும் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத் தலைவர் பொன்.குமார் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் உதவி ஆணையர் முருகப் பிரசன்னா செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இளவரசி உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை யானைமலை ஒத்தக்கடை வெள்ளாளர் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட ஆதிகாளியம்மன் கோவில் 14ஆம் பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சியில் அம்மனுக்கு பால் அபிஷேகம் நடைபெற்ற போது எடுத்த படம். உடன் கோவில் பொருளாளர் முத்து குரு, பாலமுருகன், பிரபு, கதிர்வேல், பரத், மாணிக்கம், ராஜபாண்டி மதுரை மாவட்ட பொறுப்பாளர்கள் பலர் உள்ளனர்.



காரைக்கால், திருமலைராயன் பட்டினத்தில் அமைந்துள்ள கருடப்பாளையம் அரசு தொடக்கப் பள்ளியை மாவட்ட ஆட்சியர் நேற்று காலை ஆய்வு மேற்கொண்டார். கட்டிடங்கள் பழுதாகி உள்ளதாக பல்வேறு புகார்கள் வந்த நிலையில் அப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். மேலும் கழிப்பறை வசதி மாணவர்களுக்கு குடிநீர் வசதி போன்றவற்றையும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதா என ஆய்வு மேற்கொண்ட அவர் விரைவில் பழுதடைந்த கட்டிடப் பணிகள் சீர் செய்து தரப்படும் என ஆசிரியர்களிடம் கூறினார். மேலும் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் வகுப்பறைக்கு சென்று வருகை பதிவேட்டையும் பார்வையிட்டார். மாணவர்கள் தினமும் பள்ளிக்கு வர வேண்டும் எனவும் அடிக்கடி விடுமுறை எடுப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்ட அவர் பத்தாம் வகுப்பில் நீண்ட நாள் விடுமுறை எடுப்பவர்களை அழைத்து அவர்களை படிப்பில் கவனம் செலுத்துமாறும் தினமும் பள்ளிக்கு வருமாறும் ஆசிரியர்களிடம் ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டார். . அப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுடன் கலந்துரையாடிய ஆட்சியர் குலோத்துங்கன் மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார். இந்நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.

# புதுச்சேரியில் சுட்டெரிக்கும் வெயில் அனல் காற்று பொதுமக்கள் அவதி



புதுச்சேரி: ஆக,2

புதுவையில் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் கோடை வெயில் கொளுத்தியது. அதன்பின் வங்க கடலில் மேலடுக்கு சுழற்சி காரணமாக ஜூன் இறுதியில் மழை பெய்தது. இதனால் கோடை வெயிலின் தாக்கம் படிப்படியாக குறைந்தது. பின்னர் தினமும் மாலையில் பரவலாக மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் மேலும் குறைந்து குளிர்ச்சியான வானிலை நிலவியது.

இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக மழை குறைந்து மேற்கு திசை காற்றின் வேகம் காரணமாக வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் நாள்தோறும் 100 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்துகிறது.

நேற்றும் புதுச்சேரியில் அனல்காற்று வீசியதால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்கு ஆளாகி னர். இரவிலும் வெப்பச்சலனம் நிலவுகிறது. இதனால் மக்கள் புழுக்கத்தால் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

# மதுராந்தகம் கருங்குழி ஸ்ரீ ராகவேந்திரா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் சத்யநாரயணபூஜை



மதுராந்தகம், ஆக. 2-

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த கருங்குழி ஸ்ரீ ராகவேந்திரா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ஆடி மாதம் பௌர்ணமியை முன்னிட்டு யோகபிரவேசம் செய்து பூட்டிய அறையில் 9 ஆண்டுகளுக்கு மேலாக தவத்தில் அமர்ந்திருக்கும் கருங்குழி பிருந்தாவன் சித்தர் யோகிரகோத்தமா பக்தர்களை சந்திக்கும் 111-வது பௌர்ணமி தரிசனம் நடைபெற்றது.

காலை 11 மணிமுதல் 12 மணிவரை சேஷபீடத்தில் தியானத்தில் அமர்ந்திருந்த சித்தருக்கு பக்தர்கள் தங்கள் திருகரங்களால் ஓம் நமசிவாய மந்திர உச்சாடனைவுடன் அபிஷேகம் செய்து சித்தரின் அருளையும் ஆசியும் பெற்றனர். அதனை தொடர்ந்து மக்கள் சுபிஷமுடன் வாழ ஞானலிங்கத்திற்கு பூஜை செய்யப்பட்டு ஸ்ரீ ராகவேந்திரா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் யாகம் வளர்த்து சத்தியநாரயண பூஜையும் செய்து மகாதீப ஆராதனையை சித்தர் பக்தர்களுக்கு காண்பித்தார்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற கல்வி துறை இணை இயக்குனர் பொன்.அம்பலவாணன், பெரும்பாக்கம் ராமச்சந்திரன், உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர். இவ்விழாவில் கருங்குழி மட்டுமின்றி செங்கல்பட்டு, சென்னை, புதுசேரி, பெங்களூரு, கடலூர், மற்றும் விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதியிலிருந்து திரளான பக்தர்கள் கலந்துக்கொண்டு சித்தரிடம் ஆசிபெற்றனர்.

இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை யோகி ரகோத்தமா ஸ்வாமிகள் அறக்கட்டளையின் முதன்மை அறங்காவலர் ஏழுமலைதாசன் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் அறகட்டளை நிர்வாகிகள் டி.கண்ணணண், கே.ஆர்.சுரேஷ், வி.கமலக்கண்ணண், வழக்கறிஞர் சுரேஷ், ஆர்.துளசிங்கம், பி.பரந்தாமன் முன்னிலையில் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.





தென்காசி மாவட்டம் அகரக்கட்டில் உள்ள தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் அலுவலகத்தில் வைத்து நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நிறுவனத் தலைவர் லூர்து நாடார் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காமராஜர் பிறந்த நாள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பாக நடத்த உதவி செய்த அனைத்து நாடார் உறவின் முறை நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கப் பட்டது. இந்நிகழ்ச்சியில் மாரிமுத்து, மோகன், காளிராஜ், ராம்குமார், இசக்கி தாஸ், மாரியப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை மணலியில் தனியார் பெயிண்ட் குடோனில் பயங்கர தீ விபத்து



மணலி, ஆக,2

சென்னை, அடுத்த மணலியில் ஆண்டார்குப்பம் பகுதியில் உள்ள தனியார் பெயிண்ட் குடோனில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு போலீசார் மற்றும் மீஞ்சூர், மணலி தீயணைப்பு துறையினர் விரைந்தனர். தீயணைப்பு வீரர்கள் மூன்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தீயை கட்டுக்குள் கொண்டு வர தீயணைப்பு வீரர்கள் போராடினர். அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்துள்ளதால் சுவாச பிரச்சினை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இரு பெரும் விழா நடைபெற்றது மருத்துவமனையுடன் இணைந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை பெண் குழந்தைகளை காப்போம் மற்றும் பெண் குழந்தைகளை கற்பிப்போம் என்ற திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.ரவிச்சந்திரன் துவக்கி வைத்தார். சமூக நலத்துறை திட்ட அலுவலர் மதிவதனா வரவேற்புரை ஆற்றி திட்டம் பற்றி பேசினார், இந்த விழாவில் மாவட்ட ஆட்சியர் தலைமை வகித்து 50 பெண் குழந்தைகளின் தாய்மார்களுக்கு மரக்கன்றுடன் பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்.

# என்ஐஏ கைது செய்த மதுரை வழக்கறிஞருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஆக2-

என்ஐஏ அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மதுரை வழக்கறிஞர் முகமது அப்பாஸ் மீதான வழக்கை ரத்து செய்ய மறுத்த சென்னை உயர் நீதிமன்றம், அவருக்கு நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

ஐஎஸ்ஐஎஸ் அமைப்புக்கு ஆதரவாக செயல்பட்டதாகவும், பயங்கரவாத செயலில் ஈடுபட திட்டமிட்டி ருந்ததாகவும், தடை செய்யப்பட்ட பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்பின் நிர்வாகிகள் மீது தேசிய புலனாய்வு முகமை வழக்குப்பதிவு செய்திருந்தது. இந்த வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட மதுரையை சேர்ந்த வழக்கறிஞர் முகமது அப்பாஸ், தனக்கு எதிரான வழக்கை ரத்து செய்யக் கோரியும், விசாரணைக்கு தடை விதிக்க கோரியும், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் எம். சுந்தர் மற்றும் ஆர்.சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான, வழக்கறிஞர் ஆர். விவேகானந்தன், பாப்புலர் ஃப்ரன்ட் ஆஃப் இந்தியா அமைப்பினருக்காக ஆஜரானதற்காக மனுதாரரை கைது செய்துள்ளனர். எந்த ஆதாரங்களும் இல்லாமல், புலன் விசாரணை அதிகாரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், மனுதாரரின் பென் டிரைவ்-ஐ, கைப்பற்றியதாக என்ஐஏ அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால்,



பென் டிரைவ் வைத்திருப்பது குற்றமாகாது. அதில் ஏதேனும் ஆதாரங்கள் உள்ளதா என கண்டறிய வேண்டும். பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பின் முக்கிய தலைவராகவும், ஆயுத பயிற்சி அளிப்பவராகவும் இருந்தார் என்று, எந்த ஆதாரமும் இல்லாமல் குற்றம் சாட்டியுள்ளனர் என்று வாதிட்டிருந்தார்.

அப்போது என்ஐஏ தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "வழக்கறிஞர் சம்பந்தப்பட்ட இந்த வழக்கில் என்ஐஏ எச்சரிக்கையுடன் செயல்பட்டது. கடந்த மார்ச் மாதம், இந்த வழக்கில் முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த போதே முகமது அப்பாஸுக்கு எதிராக ஆதாரங்கள் கிடைத்தன. இருந்த போதும், கூடுதல் ஆதாரங்களுக்காக காத்திருந்து தற்போது வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஃபேஸ்புக் பதிவுக்காக வழக்கறிஞர் மீது வழக்குப்பதிவு செய்ய முடியாது. கைப்பற்றப்பட்ட பென்டிரைவில் ஆடியோ சிக்கியுள்ளது. தொலைப்பேசியை ஒட்டுக் கேட்டபோது கிடைத்த தகவலின் அடிப்படையிலும் அவர் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆதாரங்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலில் இருப்பவரின் காவலை சட்டவிரோதம் எனக் கூற முடியாது. இந்த வழக்கு தொடர்பாக கேஸ் டைரியை நீதிமன்றம் ஆய்வு செய்யலாம்" என்று வாதிட்டிருந்தார். இதையடுத்து இந்த வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப் பட்டிருந்தது.

இந்த வழக்கில் நீதிபதிகள் நேற்று பிறப்பித்த தீர்ப்பில், தன் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி முகமது அப்பாஸ் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். மேலும், இந்த வழக்கின் விசாரணை நடைபெறும் நீதிமன்றத்தில் விசாரணையை எதிர்கொள்ள உத்தரவிட்டனர். இருப்பினும் அவருக்கு நிபந்தனைகளையுடன் ஜாமின் வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# அரியலூரில் புதிய பேருந்து வழித்தட தொடக்க விழா மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடக்க விழா: அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் பங்கேற்பு

அரியலூர், ஆக.2-

அரியலூரில் புதிய பேருந்து வழித்தடம் மற்றும் அரியலூர் ஒன்றிய பகுதியில் நடைபெற்ற, 7.67 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி பணிகள் தொடக்க விழாவில், அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் பங்கேற்றார்.



அரியலூர் பழைய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக அரியலூர் கிளை சார்பில் அரியலூர் அரசு கலைக் கல்லூரி மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிக்கு , மூன்று புதிய பேருந்து வழித்தடத்தினை, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் .ஜா. ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது

மேலும் அரியலூர் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் உசேனாபாத், கயர்லாபாத், நுரையூர், பூமுடையாங்குடிக்காடு, பொய்யாக நல்லூர் தாமரைக் குளம், தவுத்தாய்குளம், வாலாஜா நகரம், பெரிய நாகலூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் ரூபாய் 7.67 கோடி மதிப்பீட்டில், 33 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனிமேரி ஸ்வர்ணா தலைமையில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது. ஆங்காங்கு நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் ராஜ் மோகன், பொது மேலாளர் சக்திவேல் அரியலூர் கோட்ட மேலாளர் ராமநாதன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருளப்பன் முத்துக்குமார் உசேனாபாத் வளர்மதி உள்ளிட்ட ஊராட்சிமன்றத் தலைவர்கள், திமுக ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் இளையராஜா, கிளை செயலாளர் ராமசாமி மற்றும் திமுக பிரமுகர்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



▶ 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரை புதுக்கோட்டை மாவட்டம் வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவன் நந்தகுமாரன் மருத்துவம் பயில சென்னை ஸ்டான்லி மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான அனுமதிக்கடிதத்தினை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியனிடம் பெற்றார். அரசின் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் 478 மதிப்பெண்கள் பெற்று பி.சி கோட்டாவில் தமிழ்நாடு அளவில் 11வது இடத்தையும் அனைத்துப்பிரிவில் தமிழ்நாடு அளவில் 28 வது இடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளார். மாணவரது சாதனையை பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி வளர்ச்சிக்குழு, பள்ளி மேலாண்மைக்குழு,வெண்ணாவல்குடி கிராம பொதுமக்கள் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

# கறம்பக்குடி அருகே மோட்டார் சைக்கிள் மீது அரசுப் பேருந்து மோதி முதியவர் உயிரிழப்பு

ஆலங்குடி,ஆக.02-

கறம்பக்குடி அருகே மழையூரில் மோட்டார் சைக்கிள் மீது அரசுப் பேருந்து மோதியதில் முதியவர் பரிதாபமாக உயிரிழந்தார்.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகேயுள்ள கருப்பட்டிபட்டியைச் சேர்ந்தவர் கணேசன் (80) விவசாயி. இவர், மழையூர் சென்று விட்டு, மோட்டார் சைக்கிளில் கருப்பட்டிபட்டிக்கு சென்றபோது, மழையூர்- அதிரான்விடுதி சாலையில் கணேசன் மோட்டார் சைக்கிள் மீது அவ்வழியாகச்சென்ற அரசுப் பேருந்து மோதியது. இதில், பலத்த காயமடைந்த கணேசன் அந்த இடத்திலே உயிரிழந்தார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த மழையூர் காவல் உதவி ஆய்வாளர் சாமிக்கண்ணு உயிரிழந்த கணேசன் உடலை மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். மேலும் இதுகுறித்து மழையூர் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அகிலம் போற்றும் ஆடித்தபசு திருநாளை

# சிறப்பாக நடத்திய அரசு துறையினர், பொதுமக்களுக்கு ராஜா எம்எல்ஏ நன்றி

சங்கரன்கோவில். ஆக.2-.

சங்கரன்கோவிலில் பிரசித்தி பெற்ற ஆடித்தபசு திருநாள் வெகு விமர்சையாக நடைபெற்றது. இது குறித்து ராஜா எம்எல்ஏ கூறியதாவது ,தமிழக முதல்வரின் பொற்கால ஆட்சியில் நடைபெற்ற ஆயிரம் ஆண்டு பாரம்பரியம் கொண்ட சங்கர நயினார் - கோமதி அம்மன் திருக்கோவில் ஆடித்தபசு திருவிழா ஒட்டுமொத்த சங்கரன்கோவில் மக்களின் நீண்ட எதிர்பார்ப்பில் சிறப்புற நடைபெற்றது, ஒற்றை ஊசியின் மீது தவம் செய்து அரியும், சிவனும் ஒன்று என்ற ஒற்றுமையின் புராணக் கதையினை ஒற்றுமையை எடுத்துரைக்கும் விதமாக நடைபெற்ற தவசுக்காட்சி திருவிழா .

இதற்கு சிறப்பான முறையில் ஒத்துழைப்பு வழங்கிய சங்கரன்கோவில் பொதுமக்களுக்கும் , ஏற்பாடுகளைதிட்டமிட்ட அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும், முறையான பாதுகாப்பு அளித்த காவல் துறையினருக்கும், சிறு சுகாதார இழுக்கும் ஏற்படா வண்ணம் சிறந்த முறையில் செயல்பட்ட தூய்மைகாவலர்களுக்கும், அவர்களை சிறப்புற



வழிநடத்திய நகராட்சி நிர்வாக அதிகாரிகளுக்கும், மின்சாரதுறை ஊழியர்களுக்கும், சுகாதாரத்துறை உள்ளிட்ட அனைத்து அரசு துறையினருக்கும், தன்னார்வலர்களுக்கும் ,கடல் கடந்து வாழும் சங்கரன்கோவில் மக்களும் சிறு சங்கடமும் இன்றி தபசினை காணும் விதமாகவும், சங்கரன்கோவில் பெருமையை உலகறியச் செய்யவும், தொடர் நேரலைகள் மூலமும் அழகான புகைப்படங்கள் மூலமும் சங்கரன்கோவிலின் பெருமையை இணையம் வாயிலாகஎடுத்துச்சென்ற புகைப்பட, காணொளி கலைஞர்களுக்கும் , நிருபர்களுக்கும் , தொலைக்காட்சி ஊடகவியலாளர்களுக்கும், மனமார்ந்தநன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை வளாகத்தில் உலக தாய்ப்பால் விழிப்புணர்வு வார விழா

புதுக்கோட்டை

நமது மத்திய மற்றும் மாநில அரசுகள், உலக சுகாதார மையம் மற்றும் யுனிசெப் போன்ற உலக நிறுவனங்கள் தாய்ப்பால் முக்கியத்துவம் பற்றியும் மக்களின் அறியாமையைப் போக்கி சமுதாயத்தில் விழிப்புணர்வை உண்டாக்கும் பொருட்டு வருடந்தோறும் ஆகஸ்ட் முதல் வாரத்தை உலக தாய்ப்பால் வாரமாக அனுசரிக்கப்படுகின்றன. இதனை முன்னிட்டு நேற்று புதுக்கோட்டை டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, புதுக்கோட்டைமிட்டவுன், மகாராணி மற்றும் இன்னர் வீல் சங்கங்கள் இணைந்து உலக தாய்ப்பால் விழிப்புணர்வு வார விழா மருத்துவமனைவளாகத்தில் நடைப்பெற்றது.



டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் சலீம் விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். விழாவிற்கு ரோட்டரிசங்கத்தின்மண்டலஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, துணை ஆளுநர்கள் ஜெயக்குமார் மற்றும் கவிதாராஜசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஆரோக்கிய ஜெஸ்டின், மகாராணி ரோட்டரி சங்கத்தின் தலைவர் கருணைச்செல்வி ரவிக்குமார் மற்றும் இன்னர் வீல் சங்கத்தின் தலைவர் சாந்தி ஆகியோர் விழாவிற்கு தலைமை ஏற்று சிறப்பு செய்தனர்.

மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் திட்ட இயக்குநர் அனுராதா சீனிவாசன் மற்றும் மகாராணி ரோட்டரி சங்கத்தின் செயலாளர் சுகன்யா முரளிதரன் கலந்து கொண்டு திட்ட விளக்கவுரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக குழந்தைகள் நல மருத்துவர் மகேஷ்வரி கலந்து கொண்டு, தாய்ப்பால் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தாய்ப்பால் புகட்டுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் தாய்ப்பால் குடிப்பதால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தி பற்றியும் தாய்மார்களிடம் விரிவாகஎடுத்துரைத்தார்.

விழாவில் பங்கேற்ற தாய்மார்களுக்கு வினா-விடை போட்டி நடைப்பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் பொருளாளர். ரமேஷ் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை மருத்துவமனையின் பொது மேலாளர்ஜோசப்,செவிலியர் கண்காணிப்பாளர் பத்மாவதி மற்றும் துணை மேலாளர் திருமேணிநாதன் ஆகியோர் செய்திருந்தனர். உணவியல் நிபுணர் மகாலெட்சுமி விழாவை ஒருங்கிணைத்தார். இதில் ஏராளமான தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



▶ நாமக்கல் கலெக்டர் உமா மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# ஆவுடையார்கோவிலில் தமிழக அரசை கண்டித்து தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

ஆவுடையார்கோவில், ஆக.2-

மத்திய,மாநில அரசுகள் அறிவித்துள்ள வறட்சி நிவாரண தொகையை 100% உயர்த்தி வழங்க வேண்டியும், தங்கள் பகுதியில் உள்ள ஏரி,குளங்களை ஆழப்படுத்தி தராத தமிழக அரசை கண்டித்தும் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் விவசாய சங்க ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.



ஆர்ப்பட்டத்தில் பேசியவர்கள் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரணத் தொகையானது மிகவும் குறைவாக உள்ளது என்றும் அதனை 100% உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் சாகுபடி ஆரம்பிக்க இருக்கின்ற தற்சமயத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் நெல் விதைகளை தடையில்லாமலும், தரமானதாகவும் வழங்க வேண்டும் என்றும் ஆவுடையார்கோவில்பகுதியில் உள்ள வெள்ளாற்றில் மண்டிக்கிடக்கும் வேலிக்கருவை முட்புதர்களை அப்புறப்படுத்தி கரையை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

தொடர்ந்து பேசியவர்கள் பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னதாக ஆவுடையார்கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, அதன் கரைகளை உயர்த்தி மழை பொழிய இருக்கும் பருவமழையின் நீரை வீணாகாமல் சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்தும் விதமாக தமிழக அரசு செய்து தர வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். தொடர்ந்து மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன கோஷங்களை விவசாய சங்கத்தினர் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிகழ்வின் பொழுது தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றியத் தலைவர் முத்து,ஒன்றிய துணைத் தலைவர் வேலு, விவசாய சங்க மாவட்ட நிர்வாகக்குழு உறுபினர் சேவுகப்பெருமாள் .விவசாய தொழிலாளர் சங்க மாவட்டப் பொருளாளர் ஜெபமாலை பிச்சை, விவசாய ஒன்றிய குழு இளங்கோவன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள்,விவசாய சங்கத்தினர் பலர் கலந்து கொண்டனர்..

# அறந்தாங்கி அருகே இடையங்கோட்டை முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆடிப்பெருந்திருவிழா

அறந்தாங்கி,ஆக.2-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே இடையங்கோட்டை கிராமத்தில் முத்துமாரியம்மன் திருக்கோயில் அப்பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றாக திகழ்கிறது. இக்கோயிலில் ஆண்டு தோறும் ஆடி மாதம் பெருந்திருவிழா விமர்சையாக நடைபெறுவது வழக்கம். அதன் அடிப்படையில் இந்த ஆண்டு இக்கோயிலின் ஆடிப்பெருந்திருவிழா கடந்த 22-ஆம் தேதி காப்பு கட்டுகளுடன் தொடங்கி தினசரி காலை மற்றும் மாலை நேரங்களில் அம்பாள் வீதி உலா நிகழ்ச்சியும் நடைபெற்று வந்தது.



திருவிழாவின் ஒன்பதாம் நாளான திங்கள்கிழமை திருத்தேரோட்டம் நடைபெற்றது கோவிலில் மண்டகப்படி நடத்துவது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாலும் நான்கு முறை சமாதான பேச்சு வார்த்தை நடைபெற்ற நிலையில் ஒட்டுமொத்த சுற்றுவட்டார கிராமமக்களின் நலன் மற்றும் சட்டம் ஒழுங்கு கருதி காவல்துறை பாதுகாப்புடன் தேரோட்டம் நடைபெற்றது.

தேரோட்ட திருவிழாவில் இடையங்கோட்டை, சீனமங்கலம், திட்டக்குடி, வீரராகவபுரம் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் என பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து நல்ல மழை பெய்து இந்த ஆண்டு வேளாண்மை செழிக்க வேண்டி கூட்டு வழிபாட்டு பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர், மா பலா வாழை உள்ளிட்ட முக்கனிகள் மற்றும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தேர் கோயிலை சுற்றி நான்கு விதிகளிலும் வலம் வந்து இறுதியில் கோயில் முன்பு நிலை நின்றது.

# மாற்றுத்திறனாளிப் பெண்ணின் ஆசையை நிறைவேற்றிய புதுக்கோட்டை புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள்

புதுக்கோட்டை, ஆக.2-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே கொத்தம்பட்டியை சேர்ந்த பன்னீர்செல்வம்-வாசுகி தம்பதியினர். இவர்களுக்கு சுகுணா (33), சுகந்தி (30) ஆகிய இரண்டு மகள்கள் உள்ளனர். இருவரும் மாற்றுத்திறனாளிகள். சுகந்திக்கு திருமணமாகிவிட்டது. முடக்குவாத தசை சிதைவு நோயல் பாதிக்கப்பட்ட நிலையில் சுகுணா பெற்றோரின் பராமரிப்பில் இருந்து வருகிறார்.



எட்டாம் வகுப்புவரை படித்துள்ள சுகுணா சிறுவயது முதல் புத்தக வாசிப்பில் மிகுந்த ஆர்வமுடையவராக உள்ளார். தொடர்ந்து சமூக வலைதளங்களில் கவிதைகளை எழுதி வருகிறார். கவிதைக்காக இதுவரை 270சான்றிதழ்களும், 2 விருதுகளும் பெற்றுள்ளதாகக் கூறுகிறார்.

இந்நிலையில், 10 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டிலேயேமுடங்கிக்கிடக்கும் சுகுணா புதுக்கோட்டையில் நடைபெற்றுவரும் புத்தகத் திருவிழாவிற்கு வரவேண்டும் என்ற ஆசையை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து தனியார் ஆம்புலன்ஸ் உதவியுடன் சுகுணாவை நேற்று புதுக்கோட்டை புத்தகத்திருவிழாவிற்கு ஒருங்கிணைப்பாளர்கள் அழைத்துவந்தனர். அவருக்கு ஏராளமான புத்தகங்களை பலரும் பரிசளித்தனர்.

பின்னர் இதுகுறித்து பேசிய சுகுணா, 10 ஆண்டுகளாக வீட்டிலேயே முடங்கிக் கிடந்த என்னை புத்தகத் திருவிழாவில் பங்கேற்க வைத்த அனைவருக்கும் நன்றி. இது என்னை மிகவும் மகிழ்;ச்சி அடையச் செய்துள்ளது. எனக்குப் பிடித்த ஏராளமான புத்தகங்களை பலரும் வாங்கிக்கொடுத்தது எனக்கு மேலும் ஊக்கத்தை அளித்துள்ளது. தொடர்ந்து வாசிப்பதும், எழுதுவதும் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. மிகவும் வறுமையில் வாடும் எனது நிலையைக் கருத்தில்கொண்டு ஏதாவது ஒரு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தால் பேருதவியாக இருக்கும் என்றார்.

சுகுணாவின் தாயார் வாசுகி கூறுகையில், எனது மூத்த மகள் சுகுணாவை இந்த புத்தகத் திருவிழாவில் பங்கேற்க வைத்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கூலி வேலையும் சிறிதளவு விவசாயம் செய்து வரும் தங்களுக்கு தமிழ்நாடு அரசு போதிய உதவிகளை செய்ய முன்வர வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார்.

# அறந்தாங்கி அருகே கூட்ட நெரிசலால் அரசு பேருந்தில் இருந்து தவறி விழுந்த மாணவி மருத்துவமனையில் அனுமதி– பெற்றோர்கள் குற்றச்சாட்டு

அறந்தாங்கி,ஆக.2-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே சுப்பிரமணியபுரத்தில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இந்தப் பள்ளிகளில் 1300-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். ஆவுடையார்கோவில் பகுதியில் இருந்து 12-நம்பர் அரசு பேருந்து தினந்தோறும் நாகுடி, சுப்ரமணியபுரம் வழியாக அறந்தாங்கி சென்று வருகிறது.





இந்த பேருந்து கிடங்கியல் உதயமாணிக்கம் பட்டமடையான், கீழ்க்குடி காசாவயல் இடையன்கொல்லை முதுவளர்குடி தொண்டைமானேந்தல் வழியாக நாகுடி சுப்பிரமணியபுரம் செல்லும் நிலையில் இந்த பகுதியில் இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் பள்ளிக்கு செல்லக்கூடிய நேரத்தில் இந்த ஒரே ஒரு அரசு பேருந்து மட்டும் இயக்கபடுவதால் அதிக அளவில் மாணவ,மாணவிகள் இந்த பேருந்தில் முண்டி அடித்துக் கொண்டு பயணிக்க கூடிய அவலம் தொடர்கிறது.

குறிப்பாக நாகுடி அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் சுப்பிரமணியபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவ,மாணவிகள் இந்த பேருந்து விட்டால் பள்ளிக்கு செல்ல முடியாத துயரம் தொடர்கதையாகி வருகிறது. மேலும் அதிக அளவில் மாணவ மாணவிகள் பயணிக்க வேண்டிய நிலையில் அவர்கள் படியில் தொங்கியபடி செல்ல வேண்டிய நிலை தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில் நேற்று நாகுடி பகுதியை சேர்ந்த மாணவி ஹர்ஷினி சுப்புரமணியபுரத்தில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து வரும் நிலையில் வழக்கம்போல் இந்த பேருந்தில் ஏறி பயணம் செய்யும்பொழுது கூட்ட நெரிசல் காரணமாக கூகனூர் வளைவு என்ற இடத்தில் தவறி விழுந்து படுகாயம் அடைந்துள்ளார். அருகில் இருந்தவர்கள் அந்த மாணவியை மீட்டு சுப்ரமணியபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்த நிலையில் காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதால் மேல் சிகிச்சைக்காக அறந்தாங்கி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.அங்கு அந்த மாணவிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சம்மந்தப்பட்ட வழித்தடத்தில்கூடுதல்பேருந்து இயக்க வேண்டும் என்று பலமுறை பொதுமக்களும் பள்ளிமாணவிகளும் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் போக்குவரத்துறை அதிகாரிகள் அதை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் அலட்சியமாக இருந்தது இந்த விபத்துக்கு காரணம் என பெற்றோர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# கோடநாடு வழக்கு அரசை வலியுறுத்தி ஓபிஎஸ், டிடிவி கூட்டாக ஆர்ப்பாட்டம்

# தி நகரில் தரமற்ற உணவு ஐடி ஊழியர்கள் புகார் அதிகாரி சீல்





# டெல்லி அவசர சட்ட மசோதா மக்களவையில் தாக்கல் காங்கிரஸ் எதிர்ப்பு

சென்னை / புதுக்கோட்டை | 02.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**ஆபிரகாம் பண்டிதர்** , தமிழகத் தமிழிசைக் கலைஞர் (பி.1859) (இ.1919)



**பிங்கலி வெங்கையா** , இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் (பி.1876) (இ.1963)



**வித்தியா சரண் சுக்லா** , இந்திய அரசியல்வாதி, அமைச்சர் (பி.1929) (இ.2013)



**பங்கர் ராய்** , இந்தியக் கல்வியாளர், செயற்பாட்டாளர் (பி.1945)



## இன்றைய நினைவு நாள்

**அசிம்-உத்-தவுலா** , கர்நாடகத்தின் நவாப் (பி.1775) (இ.1819)



**வி. பி. கணேசன்** , இலங்கைத் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி, நடிகர், தயாரிப்பாளர் (இ.1996)



**நாஞ்சில் கி. மனோகரன்** , தமிழக அரசியல்வாதி (பி.1929) (இ.2000)

